1. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



பூட்டின் திறவுகோல் சாவி
அறிவின் திறவுகோல் புத்தகம்
புத்தகம் நாளும் படித்திடுவோம்
அறிவை நாளும் பெருக்கிடுவோம்
நாளும் பொழுதும் படித்திடு
உலகை நீ வென்றிடு!

2. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



சுற்றுச்சூழல் சீர்கேட்டால்
சுதந்திர காற்றை இழந்தோமே!
மரங்களை மனிதன் வெட்டியதால்
மண்ணும் மலடு ஆனதே
உயிர்க்காற்று இன்றி தவித்தோமே
உயிர்வளிக் குடுவை சுமந்தோமே!

3. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



வறுமையில் வாடிய எனக்கு
ஒருநாள் கிடைத்தது நல்லுணவு....
உண்ணும் வேளையில் நீ வந்தாய்...
பசியால் இணைந்தோம்..
பகிர்ந்து உண்ணலாம்..
வா! தோழா வா!

4. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக

கவிதையைத் தொடர்க.

தண்ணீர் நிறைந்த குளம்
தவித்தபடி வெளிநீட்டும் கை
கரையில் கைபேசி படமெடுத்தபடி
..........................................................................
..........................................................................
..........................................................................

. . .



தண்ணீர் நிறைந்த குளம்
தவித்தபடி வெளிநீட்டும் கை
கரையில் கைபேசி படமெடுத்தபடி
காணும் மனது படபடக்கும்
உயிர்த் துடிக்கும் வேளையிலே

உணர்விலா மனிதன்
கைபேசியுடன் கரையிலே!

5. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



மாட்டிற்கு
மூக்கணாங்கயிறு போடும்
மானிடப் பிறவிகளே..
இதோ..
உனக்கு
மூக்கணாங்கயிறு போட
வந்துவிட்டான்
திறன்பேசி நாயகன்..
திறன்பேசிக்கு அடிமையானால்
இதுதான்... நாளைய நிலைமை

6. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



மரமே! மரமே!
மரித்துப் போன மரமே!
மரங்களை வெட்டி வீழ்த்தியே
வெட்ட வெளியில் தவிக்கின்றான்
சூரிய ஒளியில் துடிக்கின்றான்
வெட்டிய மரங்களின் மீதமர்ந்து
மரத்தின் பெருமை படிக்கின்றான்
மரங்களைப் பற்றி படித்தது போதும்
மரங்களை நடுவோம் வாருங்கள்..

7. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



ஆடும் ஆட்டம் பாருங்கள்
துள்ளி தாளம் போடுங்கள்
ஆண்கள் ஆட்டம் பாருங்கள்
துள்ளி தாளம் போடுங்கள்
கை கால்களை உயர்த்தியே
ஆடும் ஆட்டம் பாருங்கள்
உருமி மேளம் கேளுங்கள்
துள்ளி தாளம் போடுங்கள்

*****************************************************************************************************